காந்திஜீ எழுதியிருப்பதாவது:—"ஏழை மக்களுக்குரிய பணியாற்றுவது ஸ்திரீகளின் விசேஷ உரிமையேயென நான் எப்பொழுதும் கருதி வந்துளேன். ஆகவே இம்மகாநாடு ஹரிஜன சேவையைப்பற்றி விசேஷ கவனஞ் செலுத்துமென நம்புகிறேன். ஸ்திரீகள் தீவிர ஒத்துழைப்பின்றி தீண்டாமைச் சாபத்திலிருந்து விலகமுடியாது."

மகாநாட்டில் பேசியவர்களில், ஸ்ரீமதி சரோஜினி நாயுடு, சர் ஹஸன் சுராவர்தி, புரொபஸர் ராதாகிருஷ்ணன் ஆகியோரும் சிலராவர்.

தலைவர் பிரசங்கம்

மகாநாட்டின் தலைவர் ஸ்ரீமதி அப்துல்காதிர், தமது முன்னுரையில் கூறியிருப்பதின் சாரம் வருமாறு—

"தாங்கள் என்னை இம்மகாநாட்டின் தலைவராகதேர்ந்தெடுத்ததற்கு என் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதற்கு முன் தலைமை வகித்தவர்களுடன் ஒப்பநோக்குமாறு எனக்குச் சிறிது ஆற்றலுமில்லை. நான், எனக்குத் தெரிந்த முறையில், ஸ்திரீகளின் கல்வி, சமூக முன்னேற்ற விஷயமாக உழைத்து வந்ததே தாங்கள் எனக்கு இவ்வுயர் பதவியளித்ததற்குரிய காரணமாகும். பணியாற்றுவதற்குரிய கடமை கருதிய ஒரு ஊழியனாகவே நான் தாங்கள் முன்பு வந்துளேன்.

நான் குறிப்பிட விரும்பும் மற்றொரு விஷயம் எனது பிரசங்கத்தைப் பற்றிய பாஷையாகும். எனக்கு உருது பாஷையிலேயே பழக்கமுளது; அப்பாஷையிலேயே அதை வாசிக்கவேண்டுமென நினைத்தேன். ஆனால் கேட்டுக்கொள்ளப்பட்டபடி உருது பாஷையிலெழுதப்பட்ட பிரசங்கத்தின் ஆங்கில மொழி

பெயர்ப்பையே வாசிக்குமாறேற்பட்டிருக்கிறது. தங்கள் மாகாண மகாகவி ரவீந்திரநாதர் கூறினதாம் தங்களது மானதான தாய் மொழியிலேயே பேச வேண்டுமென விரும்பினும் அதை அறியாததே இதற்குரிய காரணமாகும்.

பொதுப் பாஷை

நமது லட்சியத்தில் நமக்கு உண்மையான அபிவிருத்தியேற்பட வேண்டுமாயின் நமக்குப் பொதுப்பாஷை அவசியமானது. ஹிந்துஸ்தானி பாஷை நமது கூட்டங்களில் நமது விசேஷ கவனத்தை கவர்ந்து வந்திருக்கிறது. இதுபற்றி நமது மகாநாட்டில் வற்புறுத்தப்படாததற்காக வருந்துகிறேன். 1917-ம் வருடத்தில் இதே நகரில் மகாத்மா காந்தி தலைமையில், தலைவர்களின் பெருங்கூட்டம் கூடியபோது இந்தியப் பொது பாஷையின் அவசியம் கொண்டுவரப்பட்டு ஆதரிக்கப்பட்டது. பதினாறு வருடங்கள் கழிந்த பின்னரும் நாம் இத்துறையில் ஒருபடிகூட முன்னேறவில்லை. ஆகவே இந்நோக்கம் வெற்றிபெற, தாய் நாட்டின் அபிவிருத்தியில் உண்மையான பற்றுக்கொண்டுள்ள நாம் முயற்சிசெய்ய வேண்டும்.

கல்வி

கல்வியும், சமூகச் சீர்திருத்தமும் நமது முக்கியமான வேலைகளாகும். இவ்விஷயங்களை பற்றி விசேஷமாகப் பேசப்பட்டிருப்பினும், விசேஷ அறிவுள்ளவர்களின் உதவி இதையொட்டிப் புதிதாக யெழும் பிரசினைகளைத் தீர்க்க அவசியமாகயிருக்கிறது. தற்சமயமுள்ள கல்வி முறை மாணவிகளுக்கும் பொருத்தமற்றதென்பதில் அபிப்பிராய பேதமிராதென நினைக்கிறேன். அவர்கள் குறுகிய கால அளவில் குடும்ப வாழ்க்கையிலும் குழந்தைகளை வளர்ப்பதற்குரிய துறையிலும் பூரண அறிவுபெற வசதியிருக்கவேண்டும். இதற்குமேலாக தாய் நாட்டிற்கு உபயோகமான பணியாற்றுவதற்குரிய பொதுக் கல்வியும் அவர்கள் பெற்றிருக்க வேண்டும்.

நமது மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட அநேக விஷயங்களில் டில்லியில் லேடி இர்வின் கல்லூரியை அமைத்ததொன்றாகும். முதலில் பன்னிரு மாணவிகளுடன் ஆரம்பித்த இக்கல்லூரியில் தற்சமயம் நாற்பது பேர் கல்விகற்று வருகின்றனர். இடவசதியில்லாமையே அதிக மாணவிகளைச் சேர்க்க முடியாததற்குரிய காரணமாகத் தெரிகிறது. ஆகவே பழைய டில்லியில் சர்க்காரால் காலி செய்யப்பட்ட கட்டிடங்களைப்பெற லேடி வில்லிங்டனின் உதவியைநாட வேண்டுமென நான் யோசனை கூறுகிறேன்.

பெரும்பாலான மாணவிகளுக்கு அவசியமான வேறொரு விதமான கல்வி ஸ்தாபனங்களைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். ஆரம்பக் கல்வியுடன் சில கைத்தொழில்களும் இந்த ஸ்தாபனங்களில் பெண்களுக்கு அளிக்கப்படவேண்டும். வாழ்க்கையை நடத்துவதில் போராட்டம் அதிகரித்து வருவதைக் கவனிக்குங்கால் தங்கள் உணவிற்கு அவசியமானதை ஸ்திரீகளே சேர்க்கும்படியான காலம் வருமெனத் தெரிகிறது. ஆகவே நாம் ஸ்திரீகளை இதற்குத் தயாராக இருக்கும்படிச் செய்யவேண்டும்.

பொருளுதவி

நாம் பொருளுதவி பெறக்கூடிய ஒரு துறையிலிருந்து போதிய உதவி பெறப்படவில்லை. அத்துறை மாகாண, மத்திய சர்க்கார்களால் கல்விக்கென ஒதுக்கி வைக்கப்பட்ட நிதியேயாகும். நமது சிறுவர்களுக்கென எவ்வளவு கல்விக்காகச் செலவழிக்கப்படுகின்றதோ அவ்வளவு சிறுமிகளின் கல்விக்காகவும் செலவழிக்கப்படவேண்டும். இதற்கு மேலாக தனிப்பட்டவர்களிடமிருந்தும், சுதேச

மன்னர்களிடமிருந்தும், பெரிய வியாபாரிகளிடமிருந்தும் தொகை சேர்க்கவேண்டிய தவசியம். விடாது முயற்சி செய்வோமாயின் நமக்கு வெற்றி நிச்சயம்.

சமூக சீர்திருத்தம்

சமூக சீர்திருத்தத்திற்குரிய பெருங்கஷ்டம், பொது ஜனங்களிடம் நிலவி வரும் அறியாமையே யாகும். கல்வியே அதைப்போக்க வல்லது. பொது ஜனங்களின் அறிவு விருத்திக்காகப் பிரசாரமும், அதற்குரிய ஊழியர் படையும் அத்யாவசியமானது. அறிவைப் பரவச் செய்வதற்கு வயது வந்தவர்களுக்குக் கல்வியளிப்பதென்ற முறை வெற்றியளித்திருக்கிறது. இத்துறையில் விரிவான முயற்சி செய்யப்படவேண்டும்.

ஸ்திரீகள் பத்திரிகைகளை விசேஷ பயன்படுத்திக் கொள்ளவேண்டும். தற்சமயமுள்ள பத்திரிகைகளுக்கு ஸ்திரீகள் கட்டுரைகள் எழுதியனுப்பி வருவதுடன், புதிய பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் நோக்கத்தில் வெற்றியேற்படுவதற்காக ஆரம்பிக்கப்படவேண்டும்.

சமூகச் சீர்திருத்த வேலைக்கு பொதுஜன அபிப்பிராயத்தைப் பெறுவ தவசியமானது. அதையே வெற்றி சார்ந்துளது. சாரதா சட்டம் நிறைவேற்றப்பட்டு நீண்ட காலமாகியும், ஸ்திரீகள் சங்கங்கள் அதற்காதரவளித்தும் பால்ய விவாகத்தைத் தடுப்பதில் விசேஷ வெற்றி யேற்படவில்லை. சமூகச் சீர்திருத்தத்திற்கு மெதுவாகத் தூண்டி வருவதே உண்மையான வெற்றி தருமென நான் நம்புகிறேன்.

நகரங்களிலும் கிராமங்களிலும் கல்வி சம்பந்தமான அசைபடக் காட்சிகள் காட்டப்படுவதால் விசேஷ பலனுண்டாகும். இதற்கென நிரந்தர உபகமிட்டியொன்று நியமிக்கப்படவேண்டும். அக்கமிட்டியினர் நாம் ஒழிக்கவும், கண்டிக்கவும் உறுதி கொண்டுள்ள வழக்கங்களைப்பற்றி ருசிகரமான கதைகளும், நாடகங்களும் எழுதவேண்டும். அதே மாதிரி அவைகளைக் கண்டித்துப் பாட்டுகளும் அமைக்கவேண்டும். பயனற்ற சடங்குகளை யொட்டியும், விவாகங்கள் சம்பந்தமாகவும் ஏராளமான செலவு செய்யப்பட்டு, அதனாலேற்படும் கஷ்டத்தை யொழிக்க ஸ்திரீகள் சங்கங்கள் உண்மையான முயற்சி செய்து வருமாயின் நமது நாட்டிற்கு அவை விசேஷ பணியாற்றினவாகும்.

வாரிசு உரிமை

ஸ்திரீகளுக்குச் சொத்துரிமைபெற அனுமதி யளிக்கப்பட வேண்டுமென்பது நமது மகாநாட்டில் கொண்டுவரப்பட்ட மற்றொரு விஷயமாகும். இதி சம்பந்தமாக சட்ட சபையில் மசோதா வொன்று நிறைவேற்றப்படுவதற்கு நம்மால் செய்யப்பட்ட முயற்சியில் இன்னும் வெற்றியேற்படவில்லை. இஸ்லாமிய சட்டத்திலுள்ளபடி ஸ்திரீகளுக்குரிய பாகம் அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டுமென வற்புறுத்துவதுடன் இந்து ஸ்திரீகளுக்கு தங்கள் கணவனின் சொத்திலிருந்தும் பெற்றோரின் சொத்திலிருந்தும் பாகம் கொடுக்கப்பட வேண்டுமெனவும் நாம் கேட்டு வருவதவசியம்.

ஸ்திரீகள் வாக்குரிமை

இந்தியாவில் நடைபெற்றுவந்த அரசியல் போராட்டத்தில், நமது ஆடவர்களுடன் தோளொடுதோள் நின்று போராடிய மாதர்கள் நம்மிடையிருக்கின்றனரென்பதில் நம்மில் பெருமித மடையாதோரும், பெருந்தியாகங்கள் செய்த ஸ்திரீகள் நம்மிடையுளர். வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை யளிக்கப்படவேண்டுமென நாம் இந்திய வாக்குரிமை கமிட்டி முன்பு வற்புறுத்தினோம். பெண்ணாய்ப்பிறந்ததே சம [illegible] சந்தர்ப்பங்களளிக்கப் படுவதற்கிடையூறாக யிருக்கக்கூடா

தென்பதே நமது கோரிக்கை. நமது கோரிக்கைகள் போதியவாறு கவனிக்கப்படாததில் நாம் ஏமாற்றமடைந்துளோம்.

தீவிர ஊழியர்கள் தேவை

மகாநாட்டிற்கு வந்திருந்து அனுதாபத்தைக் காட்டுவது மட்டுமே போதிய பணியென பெரும்பாண்மையோர் கருதுகின்றனர். இதர காலங்களில் அவர்கள் வாளாவிருக்கின்றனர். நாடெங்கும் சென்று, தியாக உணர்ச்சியுடன் பணியாற்றக்கூடிய தீவிர ஊழியர்கள் நமக்கு அத்யாவசியம். ஒரு நிர்மாணத்திட்டமொன்று வகுத்து அதை நிறைவேற்றுவதில் நாம் வெற்றியடைவோமாயின் நமது உரிமைகளையும் கண்ணியத்தையும் பெறுவதில் நாம் விசேஷ பணியாற்றுபவர்களாவோம்.

முடிவுரை

நான் தங்கள் காலத்தை அதிகமாக யெடுத்துக்கொள்ள விரும்பவில்லை. நமது ஸ்தாபனம் போன்ற ஸ்தாபனத்தின் உதவிகொண்டு நாம் செய்துமுடிக்கக் கூடாததொன்றில்லை. இந்தியாவின் பல பாகங்களிலும் நமக்கு நூற்றி பதினெட்டு கிளை ஸ்தாபனங்களிருக்கின்றன. இந்திய சமஸ்தானங்களில் பன்னிரு ஸ்தாபனங்களுள்ளன. இன்னும் முயற்சி செய்வோமாயின் அநேக காரியங்களை நாம் சாதிக்கக்கூடும். இதுவரை நம்மிடையாவது ஜாதி மதபேதமிராதது அதிர்ஷ்டவசமாகும். நமது அரிய கொள்கைகளில் வெற்றிபெற ஆண்டவன் நமக்குப் போதிய வலிமையளிப்பாராக.”

தமிழ் அன்பர் மகாநாடு

1933ஸ்ரீ டிசம்பர்மீ 23உ.

சென்னைப் பச்சையப்ப முதலியார் கலாசாலை மண்டபத்தில் மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் செய்த வரவேற்புப் பிரசங்கம் :—

“ தமிழ் மொழியானது பல ஆயிர வருஷங்களாகப் பல உபகாரிகளால் பலவகையாக வளர்ச்சியை அடைந்து வந்திருக்கிறது. அப்போதிருந்த புலவர்கள் இயற்றிய நூல்களும் உரை முதலியனவும் தமிழ் மக்களின் நாகரிக வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்திருக்கின்றன. அவற்றின் இயல்பு முழுவதையும் நாம் அறிய முடியவில்லை. அவற்றிற் பல இந்தக்காலத்தில் விளங்காதனவாக இருக்கலாம். ஆயினும் அவற்றை அக்காலத்திருந்த மக்கள் சிறந்தனவாகக்கொண்டு படித்துப் பயனடைந்து வந்திருக்கிறார்களென்பதை நாம் மறக்கக்கூடாது.

பழைய நூல்கள், உரைகள் முதலியவற்றை நாம் நன்றாகப் பயின்று அறிந்துகொள்ளவேண்டும்; அவற்றைத் தமிழ் நாட்டினர் யாவரும் நன்றாக அறிந்து பயனடையும்படி செய்யவும் வேண்டும். பாடஞ் சொல்லுதலே அதற்கு உரிய சிறந்த முறையாகும். தமக்கு விளங்கும் சில பாடல்களும் நூல்களுமே சிறந்தனவென்றும் தமக்கு விளங்காதனவாயின் அவை குறைபாடுடையன வென்றும் சிலர் எண்ணிக்கொண்டு பழைய நூல்களையும் அவற்றைப் படித்தவர்களையும் புறக்கணிக்கின்றனர். அச்செயல் ஆதரிக்கத் தக்கதன்று.

சில ஆசிரியர்களுடைய நூல்களிலும் உரைகளிலும் உள்ள கருத்துக்கள் நமக்கு உடன்பாடில்லையானால் அவற்றை அலட்சியம் செய்யாமல் அவர்கள் அங்ஙனம் கூறியதற்குரிய காரணங்களை நன்கு ஆராய்ந்து பார்த்து அறியவேண்டும். கால இயல்பு மாறமாற ஒரு பாஷையின் நூலமைப்புக்களும் மாறிவருவது இயல்பு. முற்காலத்தில் உள்ள சில வழக்கங்களும், சில நூல்களிற் கூறப்பட்ட செய்திகளும் இக்காலத்திற்கு ஒவ்வாதனவாக இருக்கலாம். அதனால் அவை தவறெனத் துணிந்துவிடலாகாது.

தமிழ் மொழியில் புஸ்தகங்களில் வழங்கும் பாஷை ஒரு விதமாகவும் பேசும் பாஷை ஒருவிதமாகவும் இருக்கின்றன. பேசும் பாஷையிற் காணப்படும் கொச்சை வார்த்தைகளை அப்படியே நூல்களில் அமைத்துக்கொள்வதும், நூல்களில் வழங்கும் பாஷையிலேயே பேச முயல்வதும், அநுபவத்தில் நடைபெறக் கூடியன அல்ல. தமிழ்நாட்டின் பல பாகங்களில் ஒரே வகையாகத் தமிழ் வார்த்தைகள் வழங்கவில்லை. ஒவ்வொரு வகுப்பார் பேசுவதிலும் வேற்றுமைகள் இருக்கின்றன. சாதி, சமயம், தொழில், தேசம் என்பவற்றிற்கு ஏற்பச் சில சில வேறுபாடுகள் பேசும் பாஷையில் அமைந்திருக்கின்றன. அவைகளையெல்லாம் எழுதும்பாஷையிற் புகுத்துவதும், அவற்றைக் கொண்டு நூல் இயற்றுவதும், நினைத்த பயனை அளிக்கத்தக்கன அல்ல. ஒரு வகையினர் மற்றொரு வகையினருடைய வார்த்தைகள் சிலவற்றை வழங்குவதில்லை. சில இடங்களில் நல்ல பொருளைக் கொடுக்கும் சில சொற்கள் வேறு சில இடங்களில் கெட்ட பொருளையே கொடுத்தலைப் பார்க்கிறோம்.

ஆகவே தமிழ் வசனநடையை ஒருவகைப்படுத்த விரும்பும் அன்பர்கள் 'எழுதும் பாஷை வேறாக இருக்கிறதே' என்று எண்ணுவதிற் பயனில்லை. பிழையின்றி இயன்றவரையில் யாவருக்கும் விளங்கும் சொற்களையே எழுதும் பழக்கத்தை மேற்கொள்வதே நல்ல முறையாகும். வழக்கற்ற சொற்களையும் திரிசொற்களையும் வசனநடையில் கூடியவரையில் விலக்குதல் நன்று. தமிழ் நாட்டினர் தம் கருத்தை எளிதில் அறிந்துகொள்ள வேண்டுமென்பதை எழுதுபவர்கள் மனத்திற்கொண்டு எழுதுவதுதான் பயனை அளிக்கும். பேசினாலும் எழுதினாலும் கருத்தை அறிவிக்கும் நோக்கத்தை முக்கியமாகக் கொள்ளவேண்டுமேயன்றிக் கடினநடையைக் கைக்கொள்ளுதல் கூடாது; கொண்டால், 'தமிழே கடினமானது' என்ற எண்ணம் தமிழ் மக்களுக்கு உண்டாகிவிடும்.

பழைய காலத்தில் நூல்களைப் பாடஞ்சொல்லிய ஆசிரியர்கள் மிகவும் எளிய நடையிலேயே கருத்தை விளக்கிவந்தார்கள். பரம்பரையாகப் பாடங் கேட்கும் வழக்கமே அதிகமாக இருந்தமையால் அக்காலத்தில் தமிழ்வசன நூல்கள் இயற்றப்படவில்லை.

பல வருஷங்களுக்கு முன்பு இச்சென்னை நகரத்தில் துரைத்தனத்தார் 'கல்விச்சங்கம்' என ஒன்றை அமைத்துப் பல இடங்களிலிருந்து தமிழ் வித்துவான்களை வருவித்து அவர்களைக்கொண்டு தமிழ் வசன நூல்களை எழுதச்செய்தனர்; வேறு பாஷைகளிலுள்ள நூல்கள் சிலவற்றையுந் தமிழில் மொழிபெயர்க்கச் செய்தனர். இத்தகைய முயற்சிகள் தொடர்ச்சியாக நடைபெற்று வந்திருந்தால் தமிழ் மக்களுக்கு எவ்வளவோ நன்மைகள் உண்டாகியிருக்கும்.

பிற்காலத்தில் அச்சயந்திரம் இந்நாட்டுக்கு வந்த பிறகு தமிழில் நல்ல வசன நூல்களை முதலில் எழுதி வெளியிட்டு உபகரித்தவர்களுள் ஆறுமுக நாவலர் சிறந்தவர். அவர் எழுதிய பாடபுத்தகங்கள் நல்லொழுக்கத்தையும், தெய்வ பக்தியையும், படிப்பவர்களுக்கு உண்டாக்கும். 'நாவல்' எனப்படும் நவீனத்தை முதலில் எழுதியவர் மயூரம் வேதநாயகம் பிள்ளையாவர். அவருடைய வசன நடை எளியதாகவும் சுவையுடையதாகவும் இருக்கிறது.

சென்ற முப்பது வருஷங்களில் கணக்கற்ற வசன புத்தகங்கள் தமிழில் வெளிவந்திருக்கின்றன. அவற்றுள் திருத்தமான நடையை உடையவை சிலவே. மாணவர்களுக்காக எழுதப்படும் புத்தகங்கள் இக்காலத்தில் மிக அதிகமாக வெளிவருகின்றன. வகுப்பின் தரத்திற்கும் படிக்கும் கால அளவுக்கும் ஏற்றவண்ணம் திருத்தமாக அவை அமைந்தால் நன்றாக இருக்கும்.

சிலர் தாம் மேற்கொள்ளும் புதிய முறைகளை யாவரும் கைக்கொள்ள வேண்டுமென்று இக்காலத்தில் தூண்டுகின்றனர். பலருக்குப் பொதுவான பாஷையில் தங்கள் மனம் போனவாறு தம் கொள்கைகளை அவசரப்பட்டுப் புகுத்திவிடுதல் சரியன்று.

இக்காலத்தில் விருத்தியாகிவரும் சாஸ்திர அறிவு தமிழ் மக்களிடத்தும் நன்றாகப் பரவவேண்டுவது இன்றியமையாததாதலின் அத்துறையிலுள்ள நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுதல் அவசியமேயாகும். ஆனால், அவ்வகை மொழிபெயர்ப்புகள் ஒரே முறையாக இருக்கவேண்டும், சாஸ்திர ஸம்பந்தமாகவும் பொருளின் பெயர்களாகவுமுள்ள மற்றப் பாஷைச் சொற்களும் வேறு சிலவகைச் சொற்களும் இப்பொழுது சாதாரணமாகத் தமிழில் வழங்குகின்றன. அவற்றை மாற்றிப் புதிய சொற்களை உபயோகிக்கத் தொடங்கினால் அச்சொற்கள் தமிழ்நாடு முழுவதும் வழக்கத்தில் அமைவதற்கு நெடுங்காலம் ஆகும். சொற்களின் வழக்கமும் அவற்றின் பொருள் எளிதில் விளங்குதலும் முக்கியமேயன்றி எல்லாம் தனித் தமிழ்ச் சொற்களாகவே இருக்கவேண்டுமென்பது அநுபவத்தில் இயலுவதன்று. பழைய இலக்கியங்களிற் கூடச் சில இடங்களில் வேறு பாஷைச் சொற்களை அவ்வந்நூலாசிரியர் அமைத்திருக்கின்றனர். தமிழில் எவ்வளவோ அரியசொற்கள் இருப்பினும் கருதிய பொருளை அவ்விடத்தில் நன்றாக விளக்குவதில் அச்சொற்களைப்போல மற்றவை அமையாவென்று அப்புலவர்கள் எண்ணியிருக்கலாம்.

மொழி பெயர்க்கும்பொழுது பண்டைத் தமிழிலக்கியங்களில் கலைகளுக்குரியனவாக உள்ள சொற்களை இயன்றவரையில் உபயோகித்துக் கொள்ளலாம். பிறபாஷைச் சொற்களை எடுத்தாளும்பொழுது தமிழுக்கு ஏற்றபடி அவற்றின் உருவத்தை மாற்றிக்கொள்ளலாம். சரங்கி, உயில், பாதிரி, வங்கி, காபி முதலிய வார்த்தைகள் இங்ஙனமே அமைக்கப்பட்டனவாகும். சுதேசமித்திரன் முதலிய பத்திரிகைகளின் ஆசிரியர்களும், தனவைசியர்களும், யாழ்ப்பாணத்தார்களும் இவ்வகையில் கொண்டிருக்கும் முறைகள் சிலவற்றை நாம் கைக்கொள்ளலாம். ஒரு பாஷையிலுள்ள உச்சரிப்பு வேறொரு பாஷையில் வழங்கும்போது அதற்கேற்ப மாறினால் தான் பொருத்தமாக இருக்கும். பழைய இலக்கியங்களில் வடசொற்களை எடுத்தாளுகையில் புலவர்கள் அவற்றைத் தமிழுக்கு ஏற்ப அமைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பண்டைக்காலப் புலவர்கள் வடமொழிப் புலவர்களோடு மனங்கலந்து பழகி அவர்களுடைய கருத்துகளையும் சொற்களையும். தங்கள் நூல்களில் ஆண்டிருக்கிறார்கள். வடமொழியின் தொடர்பினால் தமிழ்மக்கள் எவ்வளவோ அரிய கருத்துக்களை அறிந்து பயனுற்றிருக்கிறார்கள். ஒரு பாஷை வேறு பாஷையின் தொடர்பினால் விரிவுறும். அதனால் அப்பாஷையின் அழகு ஒருபோதும் குறையாது.

சர்வகலா சங்கத்தார் பல வருஷங்களுக்கு முன்பு சில அறிஞர்களைக் கொண்டு ஆராய்ச்சிசெய்து தமிழ் வசன நடையில் இன்ன இன்ன சொற்களை வழங்கலாமென ஒரு முடிவைச் செய்தார்கள். அம்முடிவிற் கண்டவற்றுள் கொள்ளத்தக்க உபயோகமான சொற்களை நாம் எடுத்து ஆளலாம்,

845—21

தமிழ் மக்கள் தங்கள் தங்கள் ஜீவனத்துக்குரிய பலவகை முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதனால் யாவரும் சிறந்த இலக்கியங்களைப் படித்து இன்புறுதலென்பது இயலாத காரியம். புதிய செய்திகளோ கொள்கைகளோ இக்காலத்திற் பத்திரிகைகளின் மூலமாகவே பரவிவருகின்றன. பத்திரிகைகளைப் படிக்கும் வழக்கம் இப்போது அதிகரித்து வருகின்றது. ஆதலின் தமிழ்ப் பத்திரிகையை நடத்துகிறவர்கள் தங்களுடைய கடமையை நன்றாக உணர்ந்து தேச க்ஷேமத்தையும் பாஷையின் நன்மையையும் கருதித் தமிழ்ப் பயிற்சியுள்ளவர்களை உடன் வைத்துக்கொண்டு உழைத்து வருதல் தமிழகத்துக்குப் பரமோபகாரமாக இருக்கும். எந்தப் பொருளும் அதற்குரிய லக்ஷணங்களுடன் அமைந்திருந்தால்தான் அதனை நாம் மதிக்கிறோம்; இல்லையாயின் வெறுக்கிறோம். பாஷை விஷயத்தில் மட்டும் அந்தக் கொள்கைக்கு விலக்கு உண்டென்பது முறையாகாது.

சில வருஷங்களுக்கு முன்வரையில் தமிழின் நிலைமை மிகச் சிறந்ததாகவே இருந்தது. அரசாட்சி மாறுபாடுகளிலும் கால வேறுபாடுகளிலும் தமிழ்ப் பாஷைக்குக் குறைபாடு நேரவேயில்லை. மகம்மதியர் முதலியவர்களுடைய அரசாட்சியிற் கூடத் தமிழ் மொழிக்குரிய சிறப்பானது குறையவே இல்லை. பிற்காலத்திலும் திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் முதலிய இடங்களிலுள்ள மடங்களும், ஸேதுஸமஸ்தானம் முதலிய ஸமஸ்தானங்களும் தமிழ் வித்துவான்களை ஆதரித்துத் தமிழ் வளர்ச்சிக்குரிய காரியங்களைச் செய்து வந்திருக்கின்றன. இந்த ஆங்கில அரசாட்சியில் துரைத்தனத்தாரும் சர்வகலாசாலையாரும் பாஷையின் அபிவிருத்திக்குரிய உதவிகள் பலவற்றைச் செய்துவந்தும், நம்மவர்களே பலவகையான தக்க உத்தியோகங்களை வகித்து நாட்டின் நலத்துக்கு உரிய காரியங்களைச் செய்யும் நிலையில் இருந்தும், நூல்கள் பரவுவதற்குரிய அச்சு முதலிய சாதனங்கள் மலிந்திருந்தும், தமிழ் நூற்பயிற்சி இப்போது மாறுபட்டிருப்பதுபோல வேறு எக்காலத்திலும் இருந்ததில்லை. இந்த நிலையைப் போக்குவதற்குரிய வழிகளைப்பற்றி இங்கே உள்ள அறிஞர்கள் ஆராய்ந்து, செய்கையில் நடைபெறக் கூடியவற்றை மேற்கொண்டால் நலமாயிருக்கும்.

தமிழ் நாட்டார் பேசும்பொழுதும் எழுதும்பொழுதும் தமிழ்ப் பாஷையையே உபயோகிக்கவேண்டும். ஆங்கிலம் அறிந்தவர்களிற் பெரும்பாலோர் ஆங்கிலத்திலே நினைக்கிறார்கள்; அவர்களால் ஆங்கிலச் சொற்கள் கலவாமற் பேச முடியவில்லை. இத்தகைய நிலை ஒரு பெருங் குறையல்லவா? ஆங்கிலம் படித்தவர்களிற் பெரும்பாலோர் கடிதங்களைத் தமிழில் எழுதும் பழக்கத்தை அடியோடே விட்டுவிட்டார்கள். அவர்கள் ஆங்கிலத்தில் மிக அழகாகவும் மற்றவர்கள் வியக்கும்படியாகவும் பேசியும் எழுதியும் வருகிறார்கள். அம்முயற்சிகளையே தாய் மொழியிலும் கொள்ளுதல் முதற்கடமையன்றோ? ஜி. யூ. போப் முதலிய வேறு நாட்டினர்கள் கூடத் தமிழின் இனிமையை உணர்ந்து அதிலுள்ள பழைய நூல்களை மிக உழைத்துப் படித்து அறிந்து மகிழ்ந்திருக்கிறார்கள்; தமிழ்ப் பயிற்சி உள்ளவர்களுக்கு அவர்கள் ஊக்கமளித்தும் வந்திருக்கிறார்கள். தமிழர்களாகிய நாம் அத்தகைய முயற்சிகளைச்செய்யவேண்டிய அளவு செய்யாமல் இருக்கிறோம். ஆங்கிலம் அறிந்த தமிழர்கள் தமிழிற் பேசப் பழகிவிட்டால் தங்களுடைய கருத்தை நன்றாக வெளியிட முடிகிறதென்றும் ஊக்கம் உண்டாகிறதென்றும் சொல்லுகிறார்கள். ஆதலின் அச்செயலை யாவரும் விடாமல் மேற்கொள்ளுதல் நலம்.

. தமிழ் நூல்களைத் தக்க அறிஞர்களைக்கொண்டு வெளியிட முயற்சிசெய்ய வேண்டும். ஒருவர் மேற்கொண்ட முயற்சியையே பலர் மேற்கொண்டு உழைப்பதைக் காட்டிலும் பலவகை முயற்சிகளில் ஈடுபட்டு உழைத்தால் தமிழ் பலதுறை

யிலும் விருத்தியடையும். ஒருவர் உழைப்பினுற் செய்த ஒன்றையே பலவேறு வகையிற் கைக்கொண்டு பல உருவத்தில் தம்முடைய உழைப்பின் பயனுக வெளியிடுதல் முறையாகாது. தமிழ் அறிஞர்கள் தங்களுடைய ஆற்றலைத் தனித் தனியே காட்டும் முயற்சிகளைச் செய்யவேண்டும்.

பண்டைக்காலத்து திண்ணைப் பள்ளிக் கூடங்களில் தமிழ்க் கணித வகைகளையும் நிகண்டுகளையும் இன்றியமையாத இலக்கிய இலக்கணங்களையும் கற்பித்து வந்தனர். பழைய முறைப்படி பாடங்கேட்டவர்களுக்கு அவை உபயோகமுள்ள நூல்களாக இருந்தன. சங்கநூல்கள் வரையில் அவர்கள் தங்கள் பயிற்சியை முறையாகவே வளர்த்து வந்தனர் அந்தமுறை இப்பொழுது அடியோடு போய்விட்டது. அதனுல்தான் பாஷையில் அபிமானமும் குறைவுபட்டது.

முறையாகப் பாடஞ் சொல்லுதலும் பாடங்கேட்டலும் மலிந்திருந்த காலத்திலேதான் கம்பர், ஒட்டக்கூத்தர் முதலிய பெரும்புலவர் இருந்தனர் என்பதை நாம் எண்ணவேண்டும். அவர்களைப் போன்றவர்களை இக்காலத்தில் பார்க்கவே முடியாது. இப்பொழுது பாஷை உள்ள நிலையில் இனியும் பார்த்தல் அரிதெனத் தோற்றுகிறது. நூல் முற்றும் படித்து அறிவதற்குள் ஆராய்ச்சிகளையும் அபிப்பிராயங்களையும் சொல்லத்தொடங்கும் இயல்பு இக்காலத்தில் வளர்ந்து வருகிறது. தாம் படித்ததே போதுமென்ற திருப்தியும் பலருக்கு உண்டாகின்றது. சில நூல்களைப் படித்த பயிற்சியினுல் விரிந்துள்ள தமிழ்ப் பாஷையிலேயே திருத்தம்செய்ய அவர்கள் மூற்பட்டு விடுகிறூர்கள்.

பாடஞ்சொல்லுதலின் அவசியத்தை நன்ருகத் தமிழ் நாட்டார் உணர வேண்டும். பாடங்கேட்பதால் அறிந்துகொள்ளும் பல அரிய இரகசியங்களை எவ்வளவு சிறந்த அறிவுடையவராக இருப்பினும் தாமாகவே படித்து அறிந்து கொள்ள இயலாது. முறையாகப் பாடங்கேட்டவர்களுக்கும் தாமே படித்தவர்களுக்கும் எந்தக் காலத்திலும் வித்தியாசம் இருப்பதைக் காணலாம்.

எந்தத் துறையில் நாம் ஒரு முயற்சியைச் செய்யத் தொடங்கினுலும் அந்தத் துறையில் வல்ல அறிஞர்கள் சிலரையேனும் வைத்துக்கொண்டு அதனைச் செய்விக்கவேண்டும். எல்லோரும் எல்லாவற்றையும் செய்வதென்பது அநுபவ சாத்தியமானதன்று.

சங்க காலத்திலும் பிற்காலங்களிலும் பலவகையில் வேறுபாடுடைய புலவர்கள் தமிழ் வளர்ச்சிக்குரிய முயற்சியில் தங்கள் வேற்றுமைகளை மறந்து மனம் ஒன்றி உழைத்தார்கள். சைவர்களும், வைஷ்ணவர்களும், ஜைனர்களும், பௌத்தர்களும் பிறரும் ஒருங்கிருந்து தமிழாராய்ந்திருக்கின்றனர். இதுவரையில் வேறு விஷயங்களில் இருந்த பேதங்கள் மொழி வளர்ச்சிக்குத் தடைசெய்ததில்லை. இந்தக் காலத்திலோ யாதொரு நலனுமின்றித் தேசம், சாதி, சமயம் முதலியவற்றிலுள்ள கொள்கை வேறுபாட்டைப் பாஷை சம்பந்தமான முயற்சியிலும் சிலர் புகுத்தி வருவது மிகவும் வருந்துதற்குரியது. மன ஒற்றுமை நீங்கினுல் எந்தக்காரியமும் செய்ய இயலாதாதலின் பலதிறப்பட்ட அறிஞர்களும் ஒன்று கூடி ஒற்றுமையாகப் பழகித் தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபடவேண்டும்.

நமக்குப் பல தமிழ் நூல்களை இயற்றியளித்த புலவர்களையும் அவர்களுடைய அருஞ்செயல்களையும் நாம் மறவாமல் அத்தகைய புலவர்களுடைய நாட்களைக் கொண்டாடி வரவேண்டும்.

மதுரையில் சேதுபதி வேந்தரவர்களைத் தலைவர்களாகக்கொண்டு விளங்கும் தமிழ்ச் சங்கமும், சென்னைச் சர்வகலாசாலையும், அண்ணுமலைச் சர்வகலாசாலையும், தனவைசியர்களுடைய சில நகரங்கள் முதலியவற்றிலுள்ள கலாசாலை

களும், இத்தமிழ் நாட்டிலும் இலங்கையிலுமுள்ள வேறு சில சங்கங்களும் தமிழ் வளர்ச்சியைக் குறித்துப் பல தொண்டுகளைச் செய்து வருகின்றன. தமிழறிஞர்களிற் சிலர் தமிழ் நூல்களைப் பாடஞ்சொல்லும் முயற்சியை மேற்கொண்டிருக்கின்றனர். இப்போது திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்தின் தலைவர்களாக வுள்ளவர்கள் தமிழறிவின் வளர்ச்சியைக் கருதி நிலையான தருமங்களைச் செய்து வருதல் யாவரும் பாராட்டுதற்குரியது.

தமிழ் வளர்ச்சியின் திறத்தில் மேற்கொள்ளக்கூடிய முறைகள் இன்னும் பல இருக்கின்றன. செல்வர்களும் அறிஞர்களும் மற்றவர்களும் தங்கள் தங்கள் ஆற்றலைக்கொண்டு செய்யத்தக்க காரியங்களைச் செய்தால் தமிழ் நாட்டிற்குப் பேருதவியாக இருக்கும்.

இதுகாறும் நான் தெரிவித்தவற்றுள் உசிதமாகத் தோற்றுவனவற்றை ஏற்றுக்கொள்ளும்படி உங்களை வேண்டுகிறேன்.

இங்கே வந்துள்ள தமிழன்பர்கள் தங்கள் தங்கள் அநுபவத்தினால் அறிந்த முறைகளை வெளியிட்டுத் தமிழ்மொழி வளர்ச்சிக்கு உரிய செயல்களை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தமிழன்பர் மகாநாடு கூடியதன் நோக்கம் நன்கு நிறைவேற வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவன் திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்."

TELUGU.

సప్తమాంధ్రరాష్ట్రీయ మహిళాసభ

ఏలూరు—4—11—33.

శ్రీమతి డాక్టరు ముత్తులక్ష్మి రెడ్డిగారి అధ్యక్షోపన్యాసము.

(ముందు సంచికయొక్క శేషము.)

మన దేశములో కావలసిన సంఘసంస్కరణకు ముఖ్యప్రతిబంధకములు కొన్ని కలవు. (1) విద్యావ్యాప్తి లేకయుండుట యనగా ప్రజల అజ్ఞానము. ఆధునికవిజ్ఞానమును గడించుటకు ప్రజలకు సౌకర్యములు లేకుండుట. (2) దొరతనమువారు మతసంబంధమగు విషయములందు జూపు ఉదాసీనత. మనలో అధికసంఖ్యాకులు దరిద్రులై, అజ్ఞానులైయున్నను, పాశ్చాత్యదేశము నావరించియున్న ఘోరకళంకము లేవియు పట్టువడక హిందూదేశము పవిత్రమైయున్నది. హిందూదేశచరిత్రప్రకారము, అనాగరిక జాతులు యీ దేశమును ఆక్రమించి కొల్లగొట్టి బీభత్సము గావించినకాలములో స్త్రీల సంరక్షణకు భంగము కలుగునను భయముతో బాల్యవివాహము, ఘోషాపద్ధతి, వితంతువివాహ నిషేధము మొదలు పుట్టి ప్రబలమైనట్లు గన్పట్టుచున్నది. ఈ దురాచారముల చరిత్ర ఏదైనను వాని పర్యవసానము మనకు ఎంతమాత్రము మేలు కలుగ జేయకపోవుటయేగాక విపరీతమగు ముప్పునకు కారణమగుచుండుటను బట్టి వీని నెంతత్వరలో రూపుమాపుదుమో అంతశీఘ్రముగను మనసంఘ మభివృద్ధిజెందును. కేవలము ప్రజాహితసంఘములయొక్క ప్రబోధప్రచారములవల్లగాని, కేవలము శాసనముల నమలుపరచుటవల్లగాని తగినంత ప్రబలమైన సంఘసంస్కరణము కలుగజాలదని ఇటీవల జనాభా లెక్కల మూలమున తెలియుచున్నది. మద్రాసు, బెంగాలు, బీహారు, ఒరిస్సా, అస్సాములలోని సమష్టి జనాభా లెక్కలవలన, బాల్యవివాహములు ఎట్లు అభివృద్ధి నొందుచున్నవో స్పష్టమగుచున్నది.

వయస్సులు	బాల్యవివాహితలు		బాలవితంతువులు	
	1921	1931	1921	1931
0—1	2,144	21,330	197	594
1—5	82,860	377,983	6,526	13,196
5—10	826,488	2,019,675	46,275	54,475
10—15	2,769,585	3,333,957	136,509	98,326
0—15	3,681,072	5,752,945	189,517	166,591

ఈ అపజయమునకు మూడు కారణములను నే నారోపించుచున్నాను. మొదటి రెండు కారణములను జనాభాధికారులుగూడ నాతో నేకీభవించి అంగీకరించియున్నారు.

(1) బాల్య వివాహచట్ట నిర్మాణమునకును, ఆ చట్టము అమలులోనికి వచ్చుటకును మధ్య 6 మాసముల వ్యవధియుండెను. మనకు జనాభా లెక్కల ప్రకారము తెలియవచ్చిన బాల్యవివాహముల అధికసంఖ్యకు ఇదే కారణమని ఏకగ్రీవముగ నంగీకరింపబడినది. "జోషీరిపోర్టులో నిర్ణయింపబడిన ప్రకారం యీ వివాహచట్టమునుగురించి ప్రజలలో ప్రచారమును చేయుటకు ఈ వ్యవధికాలము ప్రభుత్వమువారిచే నుపయోగింపబడుటకు మారుగ శాసనమునకు వ్యతిరేకులయిన సాహుకార్లు పురోహితులును, మొదలగువారు ప్రజలను బెదరగొట్టుటకు అక్కరకు వచ్చెను. ఈ చట్టము అమలులోనికి వచ్చునను భీతి ప్రజలలో బాగుగా ప్రబలినదనుటకును ఆ వ్యవధికాలములో అత్యధికముగా జరిగిన బాల్య వివాహములే ప్రబల నిదర్శనములు.

(2) చట్ట నిర్మాణములోని దౌర్బల్యమువల్ల చట్టము సుస్థిరము కానేరదని చూచినంతనే విస్పష్టమగుచున్నది. ఏమన ? (a) వివాహానంతరమేగాని ప్రాసిక్యూషను జరుపకూడదట (b) అట్టి ప్రాసిక్యూషను పబ్లికు సంఘములోని మెంబరులవలననేగాని, గవర్నమెంటు ఉద్యోగస్థులవలన కూడదట (c) వాది దావాలను కోర్టులో దాఖలు చేయుటకు రూ. 100 ధరావతు కట్టవలయునట. ఇంతయేగాక వాది తాను ఋజువు చేయలేకపోయినచో సదరు రూ. 100 గవర్నమెంటువారి పరమగునట. పసిబిడ్డల నీ ఉరిత్రాడులనుండి తప్పించుటకు ఇరుకుటుంబులవారితో విరోధము, స్వీయధన నష్టము—ఈ రెంటికిని ఎవరు పాల్పడగలరు ?

(3) శాసన మైనపిమ్మట చట్టమునెడల సర్కారువారును, వారిక్రింది అధికారులును చూపిన వ్యవహారధోరణి.

చట్టము సక్రమముగా అమలులోనికి రాగలందులకు "జోషీ కమిటీవారివలన అత్యంతావశ్యకములుగా సూచింపబడిన కొన్ని వ్యవహార పద్ధతులను ఈక్రింద వివరించుచున్నాము:—

(1) ఈ చట్టనిబంధనల సంబంధమైన బహిరంగ ప్రచారమును విస్తారముగా జేయుటకు స్త్రీ సంఘములు పూనుకొనవలయును. అట్టి ప్రచారమునకు వలసిన ధనసహాయమును ప్రభుత్వము చేయవలయును. (క్రింద గీతగల సూచనను జోషీగారు పెద్దక్షరములలో నివేదికయందు ముద్రించియున్నారు.)

(2) వయస్సు మొదలగు ముఖ్యవిషయములను నిర్దిష్ట పద్ధతిగా తెలుపునట్టి వివాహ రిజిస్టరును ప్రభుత్వకార్యనిర్వాహక శాఖలయందంతటను ఏర్పాటుచేయవలెను. ఆయాస్థానములయందుండు స్థానికాధికారులలో నొకరికి ఈ వివాహవిషయములను పై రిజిస్టరులో నమోదు చేయుటకై విధిగా తెలియజేయవలెనని నిర్బంధించవలెను.

(3) అన్ని ప్రదేశములలోను శిశువుల జననములను పేరులను మగబిడ్డ లేక ఆడబిడ్డ వివరములను విధిగా అధికార్లకు తెలియజేయవలెను.

(4) బిడ్డల జనన సమయములయందును, వివాహ సమయములయందును తల్లిదండ్రులకుగాని, వారిస్థానమున ఉన్న బాధ్యులకుగాని ఉచితముగా సర్టిఫికెట్టులను యీయవలెను.

(5) కామవికారములకు సంబంధించిన నేరములను నిరూపించుటకు స్త్రీలే పోలీసులు, జూర్లర్లు, అస్సెస్సర్లుగ నుండవలెను. ఎక్కడ స్త్రీ పోలీసులు లభింపరో ఆ ప్రదేశములలో గౌరవనీయులగు స్త్రీలు నేర విచారణ సమయములందు బాలికల వెంటనుండి తగు భాధ్యత వహించవలయును.

అన్నికోర్టులయందును స్త్రీలు చేరియుండుటకు వలయు ప్రత్యేకస్థల సౌకర్యముల నేర్పాటు చేయవలయును.

జోషీ కమిటీవారిచే కోరబడిన అత్యావశ్యకములగు నీపై విషయములనుగూర్చి ఎట్టి బాధ్యతయు వహింపక పోవుటయేగాక గవర్నమెంటువారు చాలా నిర్లక్ష్యముకూడ చేయుచున్నారు. ఇట్లే దేవదాసీలను పేరున బాలికలను దేవాలయముల కర్పించు క్రూర దురాచారమును న్యాయచట్టప్రకారము (పీనల్ కోడ్) ఖండించుచున్నప్పటికి దొరతనమువారి యుదాసీనతవలన పరిగణింపదగిన మార్పేమియు జరుగలేదు. అస్పృశ్యులకు దేవాలయ ప్రవేశమును కల్పించవలెనను నుద్దేశముతో చేసిన ప్రయత్నములకుగూడ అట్టి గతియే పట్టెను.

1921 సం॥ జనాభా లెక్కలకంటె ఇప్పటికి 2 కోట్లకు పైగా జనసంఖ్య వృద్ధియయినప్పటికిని మనదేశములో నిప్పుడు 2 కోట్ల 8 లక్షలు మాత్రమే చదువుకొనినవారున్నట్లు తెలియుచున్నది. వెనుకటి జనాభా లెక్కల నాటికన్న 50 లక్షలు అక్షరాస్యులసంఖ్య వృద్ధియైనది. ఈ విషయమును గమనించినయెడల ప్రస్తుత స్థితి మిగుల శోచనీయము. కేంద్రప్రభుత్వమున్ను, స్థానిక ప్రభుత్వములున్ను ఈ విద్యాసమస్యను అత్యంతప్రాముఖ్య విషయముగా గమనించి తగినంత త్వరితముగ ప్రజలలో సంపూర్ణవిద్యావ్యాప్తి కలుగుటకు తగిన విధానముల నమలులో పెట్టకపోయినయెడల చిరకాలము నుండియు సంఘమును దేశమును పీల్చి పిప్పిజేయుచున్న దురాచారములకు బానిసలైన సామాన్యప్రజలు వివేకవంతులై మనకు తోడ్పడెద రనుట కల్ల. కేవలము బి. ఏ. డిగ్రీలు పొందినను సంస్కరణములకు విముఖులై వాటిని నిరోధించునట్టివారిసంఖ్య గాక, నిజమయిన విద్యాధికులు మనలో అత్యల్పసంఖ్యాకులుగ నుండుటచే, అవిద్యచే తమకు ప్రాణావసరములగు సంస్కరణములను సహితము ఆమోదించలేని అజ్ఞానులైన భారతప్రజలలో అమూల్యములగు నవీనసంస్కరణోద్దేశములను చక్కగ వ్యాపింపజేయు టెంతయు దుష్కరముగ నున్నది. ఇట్టి అసహాయస్థితిలో మనకు సుగమమగు మార్గ మొక్కటియే గోచరించుచున్నది. అది ఏది? తుర్కీ, చైనారాజ్యములయందువలె ప్రభుత్వమువారే అవసరమైన సంస్కరణముల నన్నింటిని శాసనబద్ధముగా దేశములో నమలు జరుపుటయే కర్తవ్యము. భారతదేశ సంస్కరణములకు పితామహు డనదగిన శ్రీ రాజ రామమోహనరాయలవంటి జగత్ప్రసిద్ధుడు సహితము "సతి" యను పేర ప్రబలిన ఘోరదురాచారమును శాసనబద్ధముగా గాక కేవల ప్రచారమువలన నెప్పటికిని నిర్మూలింపలేక పోయియుండెడివాడే. అప్పటి గవర్నరగు శ్రీ విలియం బెంటిక్ ప్రభువు "సతి" యను దురాచారమును రూపుమాపుటకు శాసనము గావించుటయేగాక అట్టి దుర్మార్గులను తీవ్రముగ శిక్షించుడని న్యాయాధికారులకు కఠినములగు నుత్తరువులను ఒసంగియుండెను. కాని దొరతనమువా రిప్పుడు తమ ధర్మమును పూర్తిగ విస్మరించి శారదాచట్టమునైనను, దేవదాసీచట్టమునైనను పూర్తిగ నమలులో పెట్టుటకు తగు బాధ్యత వహించుటలేదు. తురుష్క రాజ్యములో తరతరములనుండి వచ్చుచున్న ఘోషాదురాచారమును కెమాల్ పాషాగారు క్షణములో రూపుమాపుటయేగాక కావలసిన సంఘసంస్కరణములను శీఘ్రముగా నాచరణలోనికి దెచ్చియుండెను. అట్లే చైనారాజ్యములోని జాతీయప్రభుత్వము దేశానర్థదాయకములగు దురాచారములను నాశనము గావించి జాతీయౌన్నత్యమును సంపాదింపగలిగినది. బహుపత్నీత్వము నిర్మూలింపబడినది. స్త్రీలు స్వేచ్ఛ ననుభవించుచున్నారు. వ్యభిచారము శిక్షార్హము కావింపబడినది. వైవాహికసంబంధములలో ప్రజలు స్వాతంత్ర్యము కలిగియున్నారు. చైనారాజ్యములో తీవ్రమగు యువజనోద్యమమువలన, జాతీయప్రభుత్వము క్రింద విద్యా, సాంఘిక, మత, జాతీయ సంస్కరణములు సంపూర్ణముగ గావింపబడినవి. మన జాతీయతను, వ్యక్తిత్వమును నిర్మూలము జేయుచున్న మన పరంపరానుగత దురాచారములను బాధ్యతాయుత స్వాతంత్ర్య ప్రభుత్వము మాత్రమే రూపుమాపగలదు. కావున అత్యావశ్యకములగు సంఘసంస్కరణములకును, ప్రాథమిక విద్యావ్యాప్తికిని ప్రభుత్వమువారిని పట్టుబట్టి మనము హెచ్చరింపక తప్పదు. హిందూ సంఘము వట్టి పనికిమాలినదనియు హిందువులు గౌరవమర్యాద లెరుగని నీచులు, హీనులనియు [illegible] ప్రభుత్వము

నకు అనర్హులనియు చేతనైనంతవరకు తమ దేశములోనేగాక ప్రపంచమునందంతటను కూడ దుష్ప్రచారము చేయుటయే ప్రధానోద్దేశముగ పాశ్చాత్యులచే వ్రాయబడిన కొన్ని హానికరములగు పుస్తకములను నా పశ్చిమఖండ యాత్రలో నేను చూచియుంటిని. ఇట్టి అపనిందలను మనము లక్ష్యపెట్టకూడదని మాటవరుసకు ప్రభుత్వమువారు మనలను సమాధానపరచినప్పటికిని మన నిస్సహాయతకు ప్రభుత్వముకూడ హేతుభూతమైయున్నదని మనము వారికి తెలియజెప్పక తప్పదు. ఇట్టి గర్హ్యములగు పుస్తకములను పాశ్చాత్యదేశములోని బహిరంగ గ్రంథాలయములలో తక్షణము నిషేధించుట ప్రభుత్వమువారి విధియైయున్నది. అపహాసములగు భారతీయులను ప్రపంచములో చిన్నబుచ్చుటయే ప్రధానోద్దేశముగ ఈ పుస్తకములు వ్రాయబడియున్నట్లు ఆ గ్రంథ విషయములవలననే గ్రంథకారుల బుద్ధి విదితమగుచున్నది. దేశము అధోగతియందున్నరోజుల దాని నుద్ధరించుట ప్రభుత్వమువారి బాధ్యతకాదా? బీదలు అనారోగ్యకరములగు గుడిసెలలో తిండిలేక మలమలమాడుచుండుట చూచి వారికి తగు వసతి సౌకర్యముల నేర్పరచుట ప్రభుత్వధర్మముకాదా! విపరీతములగు దుర్వ్యయములకు పాల్పడి సంస్థానాధీశులు వారి పేదరైతుల రక్తమాంసములను పిండి తమ ఖజానాలను నింపుచున్నరోజుల రైతులను రక్షించి ప్రస్తుత పరిస్థితులను చక్కబరచుట ప్రభుత్వవిధికాదా! కాబట్టి, విద్య, ఆరోగ్యము, నీతి, ఆధ్యాత్మికవిజ్ఞానము ఈ విషయములలో ప్రజల శ్రేయోభివృద్ధి ప్రభుత్వపరిపాలనా విధానము ననుసరించియుండును. సర్వసామాన్యముగ ప్రతినాగరిక ప్రభుత్వమువారును అనుసరించవలసిన విధ్యుక్తధర్మములను మేయొరా మిస్‌గాని, పెటిగ్రిషియా కెండల్ సతిగాని, గమనించక నిస్సహాయస్థితిలోనున్న భారతజాతిని నిందించుటకే పూనుకొనుట అక్రమము మాత్రమేగాక కుతంత్రమువలెగూడ కన్పట్టుచున్నది. ఇట్టి దూషణల కన్నింటికిని హిందువులు సమాధానమొసంగగల స్థితిలో లేరు. మీదు మిక్కిలి అఖిలప్రపంచ సమక్షమున ఆ దూషణలయొక్క సత్యాసత్యముల విమర్శచేయించి రాద్ధాంతసిద్ధాంతములు చేయుటకు హిందువు లిప్పుడు సమర్థులుకారు.

ప్రభుత్వముయొక్క విధ్యుక్తధర్మము లెట్టివో, ప్రభుత్వ విధానములలోని మార్పులు ప్రతి కుటుంబమునందలి కుటుంబినియగు తల్లియొక్క కష్టసుఖముల నేరీతిగా వర్తించునో, ఆ కుటుంబముల ద్వారా కులమునకును సంఘమునకును జాతికిని అవి ఏరీతిగా వర్తించునో విశదీకరించుటకై నీక్రింద వ్రాయుచున్నాను:—

పీఠికలో కనుబరచిన చక్రమువలన గృహములో గృహిణికిని ప్రభుత్వవిధానమునకును ఎట్టి పరస్పర సంబంధము కలదో విస్పష్టము కాగలదు. ఇది కేంద్రస్థానమునందున్న తల్లియొక్క దృష్టిలో ప్రభుత్వమెట్టి బాధ్యత వహింపవలసియున్నదో చూపించుచున్నది.

(1) ప్రభుత్వము అనగా ప్రభుత్వవిధానము మాత్రమనిగాని అమలులోనున్న అధికార వర్గమనిగాని అర్థముకాదు.

(2) ప్రభుత్వోద్దేశము—అనారోగ్యము, అజ్ఞానము, కరువు, కల్లోలము అను నీ నాలుగు పీడలబారిపడకుండ ప్రజలను కాపాడుట.

(3) ప్రజలను ఈ అపాయములనుండి తొలగించి కాపాడుటకు చట్టముల ద్వారా ఈ దిగువ నుదహరించిన విషయములలో శ్రద్ధ వహింపవలసియున్నది:—

(ఎ) ఆరోగ్యము, అనుకూలవాతావరణము అనగా ముఖ్యముగా మంచినివాసములు.
(బి) విద్య.
(సి) జీవనోపాధి—అనగా మనకు కావలసిన వస్తువులను ఉత్పత్తిచేయుట, లేదా, మనకు కావలసినవానికొరకై బదలీగా ఇతర వస్తువులను తయారుచేసి యిచ్చుట.

(డి) పౌరస్వామ్యములు—అనగా వ్యక్తిస్వాతంత్ర్యమున్ను, సర్వసమత్వముగల న్యాయ పరిపాలనయున్ను—

ఇవన్నియును ఇంటిలోని కుటుంబినియగు తల్లికి ముఖ్యములైన విషయములు. అవి ఆమె జీవితమును కుటుంబజీవితమును తారుమారు చేయగలవు. కనుక శాసననిర్మాణములయందు స్త్రీ జోక్యము కలుగచేసికొనవలసియున్నది. అనగా ఎన్నికలలో తగు బాధ్యత వహింపవలసియున్నది. అట్లయినచో శాసనసభలకు తగినవారిని పంపి వారిద్వారా న్యాయచట్టములను నిర్మించి తద్వారా తమ కుటుంబ సంసారములను పైచెప్పిన నాల్గు అపాయములనుండి రక్షించుకొనగలరు. కావుననే స్త్రీ వోటరులసంఖ్య అధికముగ నుండవలయుననియు, వారు స్వతంత్రులై విద్యావివేకవంతులై ఓట్లు నీయవలెననియు మా విజ్ఞాపనమునందు మేము ఇంగ్లాండులో మనవిచేసియున్నాము. మనపిల్లలకు చక్కనివిద్య, ఆరోగ్యము, శరీరదార్ఢ్యము జీవనోపాధి కావలయును. ఇవి లభించుటకనువైన పరిపాలనావిధానములను నిర్ణయించుటలో మన మాట చెల్లుబడియగుటకు మనకు శాసనసభలలో తగిన ప్రాతినిధ్యముండవలెను. మన పిల్లలకు నిర్బంధప్రాథమిక విద్య యుండవలెననియు, పాఠశాలలోని పిల్లల ఆరోగ్యదార్ఢ్యములను వైద్యులు పరీక్షించుచుండవలెననియు, తల్లులకును బిడ్డలకును రక్షణారోగ్యముల నొసంగవలెననియు, బీదలకు ఆరోగ్యకరమైన వసతుల నేర్పరచవలెననియు, వైవాహికపద్ధతులను సంస్కరించవలెననియు, మనవారసత్వపు హక్కులను సంస్కరింపవలెననియు స్త్రీ పురుషుల పరస్పరసంబంధము ఉత్తమ నీతిదాయకములై యుండవలెననియు, స్త్రీలను బాలికలను వ్యభిచారప్రవృత్తికై యుపయోగించు వ్యాపార మడుగంటవలెననియు మనము కోరుచున్నాముగదా. ఇవన్నియును మనలను రాజకీయరంగములోని కీడ్చుచున్నవి. దేశమునకు భవిష్యన్నాయకులై పౌరులై పాలయగల మన బిడ్డల యోగక్షేమముల కనువగురీతిని ప్రభుత్వ పరిపాలనా పద్ధతులను నిర్ణయింపజేయుటకై మనము రాజకీయములందు పాల్గొనక తప్పదు. ఇతర దేశములలోని స్త్రీలు రాజకీయ విషయములను చర్చించుచుండగా మన మేల చర్చింపరాదు? పురోభివృద్ధినందుచున్న ఆ దేశముల స్త్రీలవలె మనమేల వ్యవహరింపరాదు?

భారతీయులైనను ఆంగ్లేయులైనను ప్రభుత్వాధికారులైనప్పుడు మతవిషయములందు తటస్థముగా నుండుట దేశారిష్టమనియు అట్టి తటస్థభావమును విడనాడినప్పుడే ప్రజలకది శ్రేయస్కరమనియు విన్నవించుచున్నాము. సత్ప్రభుత్వమునకు చిహ్నము ఏదనగా మంచి ఆరోగ్యవంతమై విజ్ఞానవంతమైన సంతృప్తికరమైన ప్రజాసమూహము. ప్రభుత్వము ఈ ధర్మమును నెరవేర్చలేక పోయినయెడల ప్రజలలో అసంతృప్తి ప్రబలి శీఘ్రముగనో, ఆలస్యముగనో ఎప్పుడో యొకప్పుడు ఆ ప్రభుత్వము నశింపగలదు.

ఐకమత్యము.

మనము విజయము నందవలెనన్నయెడల మన హక్కులను సంపాదించుటలో ఏకాభిప్రాయములమై యుండవలెను. దురదృష్టవశాత్తు పురుషులలో కొందరికి భిన్నాభిప్రాయములు కలవు. ప్రతి దేశములో పార్టీలు, కక్షలు ఉన్నను దేశశ్రేయోభివృద్ధి కందరును పరస్పరైకమత్యముతో పనిచేయుదురు. మరియు మనలో నిపుడు సాంఘికప్రాతినిధ్యము, ప్రత్యేకస్థానములు విపరీతములై ప్రతిమించి రాగమునబడినవి. ఇందువలన ప్రపంచదృష్టిలో హిందుస్త్రీస్థితి సంకుచితమగుచున్నది. రౌండు టేబిలు సభకు ప్రతినిధులుగా వెడలిన మన పురుషులు తగిన సామర్థ్యమును, ధైర్యమును, సాహసమును చూపజాలనప్పుడు అట్టిస్థితిలో స్వేచ్ఛ, స్వాతంత్ర్యము లనుభవించుచున్న యితర దేశ స్త్రీలతో సరిసమాన హక్కులను మనము ఏవిధముగ వాంఛింపగలము? దేశములో ప్రస్తుతమున్న ఈ విషాద

పరిస్థితిని మనలో కొద్దిమంది మాత్రమే గ్రహింపగలిగినప్పటికిని అన్ని సంఘములకు చెందిన ఆయా ప్రతినిధినాయకులు ఒక యుచితమైన సమాధాన పద్ధతికివచ్చి దేశదుస్థితిని తొలగింపవలెనని హృదయపూర్వకముగా మనవిచేయుచున్నాము.

మన కర్తవ్యము.

మన గృహకృత్యములందును తమ వృత్తివ్యాపారములందును నిమగ్నులై మనలోని స్త్రీ పురుషులు చాలమంది తమ జీవితములను గడపుచున్నారు. కాని ప్రజాహిత కార్యములందు శ్రద్ధాసక్తుల వహించుటలేదు. ఈ రీతిగా వ్యవహరించుట ప్రస్తుత దేశావస్థలో మిక్కిలి హేయమనదగియున్నది. నిందాస్పదమైయున్నది. జాత్యుద్ధరణసంఘోద్ధరణకార్యము లనేకములు మన దేశములో విరివిగా జరుగవలసియున్నను, విదేశీయులగు మిషనరీలు మన దేశమునకువచ్చి మనల నుద్ధరించుటకై అనేక సత్కార్యములను జేయుచున్నను మన దౌర్భాగ్యదశను మనమే మఱచి నిశ్చింతగా నెట్లు కాలము గడుపగలము? విద్యాధికులైన మన యువకులును యువతులును, యీవర్తమానపరిస్థితులలో బ్రహ్మచర్యదీక్షావలంబులై చైనాలోని విద్యార్థిబృందము చేసినరీతిగ పల్లెపల్లెకును పరిశీలింటికిని పోయి విజ్ఞానోత్తేజమును విస్తరింపజేయవలెను. వివాహితులైనవారుకూడ తమ వృత్తి వ్యాపార ధర్మములను గృహకృత్యములను నిర్వర్తించుకొనుటయే గాక అనుదినమును కొంతకాలము సాంఘిక సేవార్థమును, జాతీయోద్ధరణ కార్యములకొరకును వినియోగింపవలెను. ప్రభుత్వోద్యోగులుకూడ పుణ్యకార్యాసక్తులై సాంఘిక సేవ చేయవచ్చును. అనాథ బాలబాలిక శరణాలయములకొరకును, నిరుపేదలగు బిచ్చగాండ్ర శరణాలయములకొరకును, బీదపిల్లల రాత్రిపాఠశాలలకొరకును కృషిసల్పవచ్చును. కాబట్టి సాకులు చెప్పి స్తబ్ధులై యుండుట కెవరును యత్నింపకుందురు గాక.

"సర్వేజనా స్సుఖినోభవంతు" అను మహోదారభావముతో, సమహితత్వబుద్ధితో, త్యాగము ప్రేమగల హృదయములతో, స్వార్థరహితమైన నిష్కళంక దేశాభిమానముతో మనమందరమును దేశసేవాతత్పరులమై చరితార్థులమయ్యెదము గాక. భారతదేశప్రతిష్ఠను కాపాడి ప్రశంసనీయమున గౌరవము గడించెదము గాక!

స్వార్థవిరహితులై త్యాగపూరితులై నిరంతర మానవసేవానురక్తులై చరించు గాంధిమహాత్ములును ఆ మహాత్ముని సతీమతులుసుగూడ లోకమున కంతకును ఆదర్శప్రాయులై మనకందరకును మార్గోపదేశకులై వెలసియున్నారు. మనము వారి యడుగుజాడల చరించి తరింతుము గాక!

Printed and Published by D. Manickam at Payne & Co., 17, Mount Road, Madras.